Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No.410 /2023

Deposition of witness for Prosecution P.W.1 Date : 09.02.2024

| | |
|---|---|
| Name : குப்புராஜ் | Father's Name : தேவணகவுண்டர் |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2024 **(Accused Present)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.

நான் தற்போது குரும்பபாளையத்தில் குடியிருந்து நீர்பாசன கம்பனியில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு புகார்தாரர் சக்திதேவி, ஆஜர் எதிரி சண்முகம் என்பவர்களை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். புகார்தாரர் சக்திதேவி எதிரியின் வீட்டில் தான் குடியிருந்து வந்தார். 2017ம் ஆண்டு ஒரு நாள் அவர்கள் இருவரும் மாலை 5.30 மணியளவில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அருகே சென்று பார்த்த போது நான்கு மாத வாடகை தரவில்லை என்பதால் எதிரி அவரை கேட்டார். அதற்கு சக்திதேவி நான் வாடகை கொடுக்க முடியாது, வீட்டினை காலி செய்ய முடியாது என்றும் சக்திதேவி சொன்னார். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். எதிரி சக்திதேவியை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் அடிப்படையில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ தேதி, நேரம், இடத்தில் வைத்து இந்த வழக்கின் எதிரி இந்த வழக்கின் புகார்தாரரை பொது இடத்தில் வைத்து ஆபாசமாக பேசி கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு இப்பொழுது ஆபாகசமாக பேசியதாகவும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும் எதிரியின் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.)

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |